**பன்வில பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2018 ஜுலை 11 திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பன்வில பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபளிக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ள சபைக்கு சொந்தமான காணி மற்றும் உடுகொட 4 சுடுகாடு மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டு ஹுலுகங்கை பார்வை கூட நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,190,406 செலவில் ரூபா 237,606 பெறுமதியான இரும்பு வேலி அகற்றப்பட்டமை நிதிக்கூற்றுக்களில் அகற்றப்படவில்லை.

(இ) மின்சக்தி அமைச்சினால் மீளாய்வாண்டில் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 680,000 பெறுமதியான சூரிய சக்தி தொகுதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 129,500 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆண்டிற்கான முச்சக்கர வண்டி தரிப்பிட வருமானமாக கிடைத்த ரூபா 22,000 தொகை பொது வைப்புக் கணக்கில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டின் கணக்காய்வுக் கட்டணமான ரூபா 119,370 தொகையினை கருத்திற் கொள்ளாது, மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 50,000 கணக்கிடப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டுகளில் முத்திரைக் கட்டண வருமானமாக கிடைத்திருந்த ரூபா 1,200,000 தொகையினை கருத்திற் கொள்ளாது, மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண வருமானமாக ரூபா 200,000 கணக்கிடப்பட்டிருந்ததுடன், பெற வேண்டிய வருமானமும் சரியாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 எதிர்பாராத பொறுப்புகள்

வேலைகள் மற்றும் வியாபார குத்தகை செலுத்தாமை தொடர்பாக 9 நபர்களுக்கு எதிராக சபை மூலம் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்த போதும், அது தொடர்பாக கணக்கு குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய 2 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,860,878 ஆனது. அது தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஆண்டு 1 முதல் 5 வரையான காலத்திற்கு உரிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 255,316 ஆனதுடன், 5 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,022,507 ஆக காணப்பட்டன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 19,399,534 ஆனது. அது தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஆண்டு 1 முதல் 5 வரையான காலத்திற்கு உரிய தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,283,384 ஆனதுடன், 5 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,610,914 ஆக காணப்பட்டன.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 2,029,426 ஆன 02 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

1.3.5 **இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | ---------------------------------------------------- | -------------- | ----------------------- |
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் | | |
| | (i) 126 (vii) உ மற்றும் (xxx) உப பிரிவுகள் | 234,221 | சபை அதிகார எல்லையில் காட்சிப்படுத்தப்படும் அனைத்து விளம்பரப் பலகைகளிருந்தும் கட்டணம் அறவிடுவதற்காக உப சட்டம் அமுல்படுத்தப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (ii) 149 பிரிவு | - | சுற்றுலா துறை அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட உணவகங்களிலிருந்து 1 வீதம் வரையான குத்தகைப் பணம் அறவிடப்படவில்லை. |
| (ஆ) | 1988 ஆகஸ்ட் 23 திகதிய இலக்கம் 520/7 கொண்ட அதிவிஷேட வரத்தமானி | | |
| | (i) 32 உப பிரிவு | - | உரிய அறிவுரைகளை கருத்திற் கொள்ளாது தனிப்பட்ட மாடு அருப்பிடமொன்றை நடாத்திச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) 20 உப பிரிவு | | உரிய அறிவுரைகளை கருத்திற் கொள்ளாது மாட்டிறைச்சிக் கடையொன்றை நடாத்திச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமானம் 104 | 72,000 | பெகோ இயந்திரம் ஒன்று விபத்திற்குள்ளாகி இழப்பொன்று ஏற்பட்டிருந்த போதும் அது தொடர்பாக விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| | | | |
| (ஈ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2:8:1 | - | ஹுலுகங்கை பார்வைக் கூட நிர்மாணக் கருத்திட்ட பெறுகைக் குழுவிற்கு நிபுணத்துவமுடைய ஒருவரின் உதவியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

---------------------

**2.1 நிதி விளைவுகள்**

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,648,584 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 4,219,513 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

----------------------------------

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 1,438,000 | 1,509,306 | 1,316,746 | 379,104 | 937,000 | 975,513 | 741,028 | 411,716 |
| வுாடகை | 1,077,571 | 1,143,548 | 1,106,579 | 42,750 | 995,140 | 1,031,577 | 987,483 | 59,697 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,226,000 | 2,970,946 | 2,941,946 | 37,000 | 1,296,000 | 2,500,879 | 2,488,879 | 20,000 |
| ஏனைய வருமானம் | 1,719,800 | 2,273,795 | 1,397,710 | 1,055,090 | 2,048,800 | 1,896,457 | 853,359 | 1,431,974 |
| | 6,461,371 | 7,897,595 | 6,762,981 | 1,513,944 | 5,276,940 | 6,404,426 | 5,070,749 | 1,923,387 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான பன்வில வியாபார கட்டடத் தொகுதியின் கடையறைகள் மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டிருந்த போதும், மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை.

(ஆ) சபை அதிகார எல்லையிலுள்ள தனியார் நிருவனங்கள், உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களிலிருந்து குப்பை வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் உபகரண அலகிற்கு வழங்கப்பட்ட வாகனங்களிலிருந்து வருமானத்தை வளர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.3 வீத வரி மற்றும் வாடகை**

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலுவை வீத வரி மீதி ரூபா 327,616 ஆனது. அம் மீதியில் 1 ஆண்டு முதல் 5 ஆண்டு வரையான காலத்தை விஞ்சிய ரூபா 139,913 மற்றும் 5 ஆண்டுகளிலும் கூடிய காலத்தை விஞ்சிய ரூபா 19,323 மீதியும் உள்ளடங்கியுள்ளன.

(ஆ) **ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 51,489 மற்றும் மீளாய்வாண்டு பில் இடல் ரூபா 38,289 ஆனதுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அறவிடப்பட்டவை முறையே ரூபா 19,634 மற்றும் ரூபா 29,658 மாத்திரமே. ஆண்டு ஆரம்ப நிலுவையின் ரூபா 41,619 தொகை 5 ஆண்டுகளை விஞ்சியிருந்தது.

2.2.4 **ஏனைய வருமானம்**

(அ) **நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 226,570 ஆனதுடன், அவற்றில் ரூபா 67,245 தொகை ஓராண்டு முதல் 5 ஆண்டு வரையான காலத்திற்குரியன.

(ஆ) **முட்ச்சக்கர வண்டி தரிப்பிட கட்டணம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை முட்ச்சக்கர வண்டி தரிப்பிட கட்டண மீதி ரூபா 288,050 மற்றும் வருட பில் இடல் ரூபா 167,000 ஆனதுடன், மீளாய்வாண்டில் முறையே ரூபா 71,025 மற்றும் ரூபா 114,300 மாத்திரமே அறவிடப்பட்டன.

2.2.5 **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 91,076 பெறவேண்டி இருந்ததுடன், முத்திரை கட்டண வருமானம் மதிப்பீட்டின் அடிப்படையில் ஏனும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயளாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் பொது நலன், வசதிகள் மற்றும் நலன் புரி போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வரமாறு குறிப்பிடப்படுகின்றன.

(அ) **துணைச் சட்டம்**

----------------------------

பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ள துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதும் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் எவ்வித் துணைச்சட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **ஒதுக்கீடு வழங்கப்படாமை**

-----------------------------------------------

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் சபை மூலம் மேற்கொள்ளவேண்டியிருந்த செயற்பாடுகளிற்காக வரவு செலவு திட்டம் மூலம் ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

(இ) **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

------------------------------------------------------------------------------------------------------------

ஹுலுகங்கை பார்வை கூட நிர்மாண ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பீடு ரூபா 8,207,466 ஆன போதும், அம் மதிப்பீட்டின் ரூபா 2,907,663 பெறுமதியான 13 வேலை விடயங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாததுடன், அக் கருத்திட்டத்தின் மேற்பார்வை மிக்க பலவீன மட்டத்தில் நிலவியது.

(ஈ) **எதிர்பார்த்த விளைவுகளை(out come) பெற்றுக் கொள்ளாமை**

----------------------------------------------------------------------------------------------------------------

செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 2 வேலைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 6,904,748 செலவிட்டு எதிர்பார்த்த வெளியீட்டு மட்டதினை (out put) அடைந்திருந்த போதும் எதிர்பார்த்த விளைவினை (out come) அடைந்துகொள்ளாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| செயற்பாடுகள் | 2017 திசம்பர் 31 வரை செலவு | அவதானங்கள் |
|---|---|---|
| | ரூபா | |
| (i) நகல்ஸ் பார்வையிட வரும் பிரயாணிகளுக்காக நலன்புரி வசதிகளை வழங்க நிர்மாணிக்கப்பட்ட மத்திய நிலையம் | 4,404,748 | இக் கருத்திட்டததை நிர்மாணித்து ஓர் ஆண்டை விஞ்சிய காலம் கடந்திருந்த போதும், பயன்படுத்தப்பட்டு வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | | |
| (ii) வாராந்த சந்தை கட்டிடம் | 1,500,000 | இக்கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 27 மாத காலம் கடந்திருந்த போதும் செயலற்று நிலவியது. |
| | ------------------------- | |
| | 6,904,748 | |
| | ========== | |

**(உ) கைவிடப்பட்ட வேலைகள்**

-----------------------------------------------

மீளாய்வாண்டில் வேலையொன்று ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 1,834,580 செலவிடப்பட்ட போதும் 2017 திசெம்பர் 31 வரையும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடையாது கைவிடப்பட்டிருந்தது.

| செயற்பாடு | 2017 திசெம்பர் 31 வரை செலவிட்ட பணம் | அவதானங்கள் |
|---|---|---|
| | ரூபா | |
| சபை அலுவலக கட்டிடம் மற்றும் வாசிகசாலை கட்டிட புனர்நிர்மாணம் மற்றும் நவீன மயமாக்கல் | 1,834,580 | ரூபா 3,288,855 இற்கு டென்டர் ஒப்படைக்கப்பட்ட போதும், காலம் போதாமை காரணமாக ரூபா 1,834,580 யிற்கு கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. |

(ஊ) **செயற்படுத்தப்படாத வேலைகள்**

மீளாய்வாண்டில் 5 வேலைகளை செயற்படுத்துவதற்காக ரூபா 1,164,895 ஒதுக்கீடு பெறப்பட்ட போதும், கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. விபரம் பின்வருமாறு.

| செயற்பாடு | மதிப்பிடப்பட்ட தொகை ரூபா | அவதானங்கள் |
|---|---|---|
| (i) மாஉஸ்சாவ தோட்ட மேல் பகுதியில் தேயிலை தொழிற்சாலையிலிருந்து மைதானம் வரையான பாதையை அபிவிருத்தி செய்தல் | 978,895 | பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று முன்வராமை. |
| (ii) பன்வில, உடுகொட, கலகொள்ள 30/1 முகவரியில் வசிக்கும் பயன்பெறுனர் ஒருவருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கியமை | 15,000 | கருத்திட்டத்தை இரத்துச் செய்தல் |
| (iii) மடுல்களே அரத்தன 18 கட்டயில் வசிக்கும் பயன்பெறுனர் ஒருவருக்கு கூறையிட தகரம் வழங்கியமை | 6,000 | பயன்பெறுனர் தேவையான தகவல்களை வழங்காமை |
| (iv) ஹுலுகங்கை அலகொலவத்த பிரதான பாதையை அபிவிருத்தி செய்தல் | 150,000 | கருத்திட்டத்தை இரத்துச் செய்தல் |
| (v) தெஹிமடித்த உதும்பராகிரி மரண உதவி சங்கதிற்கு சமையல் கட்டளைத் தொகுதி ஒன்று வழங்கியமை | 15,000 | சங்கம் பதிவு செய்யப்பட்டு 2 ஆண்டுகள் கடந்திராமை |
| | 1,164,895 | |

(எ) **கழிவுப் பொருள் முகாமை**

சபை அதிகார எல்லையினுள் தினத்தோறும் ஒன்று சேறும் 01 டொன் அளவான கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்து, வாரத்தில் ஒரு தினம் குண்டசாலை பிரதேச சபையிற்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்ததுடன், துருப்பிடிக்காத மேலும் ஏனைய கழிவுகள் ஹாதளே காணியொன்றிற்கு மற்றும் ஹுலுகங்கை பரிசுத்த ஜோன்ஸ் காணிக்கு ஒழுங்கற்ற விதத்தில் இடப்பட்டிருந்தன. கழிவுகள் இடப்படும் இக் காணிகள் பிரதான பாதையின் காணப்படும் அதிக பள்ளத்தாக்கான பிரதேசமாவதுடன், கழிவுப் பொருட்களை கொட்டுவதனால் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய அபாயகரமான நிலைமை காணப்பட்டது. நகில்ஸ் பாதுகாப்பரனிற்கு அன்மித்த பகுதிகளில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவது சுற்றாடல் மாசடைதலுக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

(ஏ) **நிலையான அபிவிருத்தி**

சபையினால் நிலையான அபிவிருத்தி நோக்கின் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிருக்கவில்லை.

3.2 **முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆண்டில் ரூபா 25,000 பணம் அறவிடப்பட்டு விளம்பர நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட மணிக் கூட்டுக் கோபுரத்திற்காக 2017 ஆண்டில் ரூபா 20,000 ஆன வருடாந்த கட்டணம் அறவிடப்பட்டதனால் 20 சதவீதமான வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையினால் நடாத்தப்படும் 07 நீர் கருத்திட்டங்களில் 370 வியாபார நீர் விநியோகங்களிற்காக மாணிகள் பொருத்தப்படாதுடன், வீட்டுப் பாவனை விநியோகங்களிற்காக ரூபா 200 ஆன மாதாந்த கட்டணம் அறவிடப்பட்டன.

(இ) ஹுலுகங்கை அன்மித்த பிரதேசத்தில் 08 வெற்றுக் காணித் துண்டுகள் 08 நபர்களுக்கு 1982 ஆண்டு முதல் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், சபையினால் குத்தகை மறுபரிசீளிப்பு மற்றும் குத்தகை ஒப்பந்த புதுப்பித்தல் இன்றி கன அடியிற்கு ரூபா 30 வீதம் நீண்ட கால குத்தகை அறவிடப்பட்டிருந்தது. காணித் துண்டுகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்காததுடன், சபையினால் எல்லைகளை நிர்ணயித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.3 **மனித வள முகாமை**

**(அ) ஊழியர் வெற்றிடம்**

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணிக்கிடையில், 4 பதவிகளில் 7 பற்றாக்குறைகள் நிலவின. முகாமைத்துவ உதவியாளர் சேவை 1 வகுப்பு அலுவலர் ஒருவரினால் செயலாளர் பதவியில் வேலை பார்க்கப்பட்டது.

(ஆ) **ஊழியர் கடன்**

இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை நிறைவு செய்த இரண்டு ஊழியர்களிடமிருந்து முறையே ரூபா 3,638 மற்றும் ரூபா 12,600 ஆன கடன் மீதி அறவிடப்படவிலலை.

3.4 **சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

ரூபா 10,800,000 பெறுமதியான ஹுலுகங்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் மதிப்பீட்டினை விதிந்துரை மற்றும் மீள்பரிசீலணை செய்திருந்த இரண்டு அலுவலர்களினால் ஒப்பந்த கையளிப்பு தொடர்பான குழு விதிந்துரையினை வழங்கியமை காரணமாக அதன் நம்பகத் தன்மை மற்றும் ஏற்புத் தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாமல் இருந்தன.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

3.5.1 **விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

(அ) ரூபா 24,880,000 பெறுமதியான டம்ப் டிரக் வண்டி மற்றும் பெகோ இயந்திரம் குறை பயன்பாட்டுடன் நிலவின.

(ஆ) சபைக்கு சொந்தமான 3 வாகனங்கள் 2½ வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையான காலத்தினுள் எவ்வித பயன்பாடும் இன்றி அலுவலக வளவில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தன.

3.6 **சிக்கனமற்ற கொடுக்கள் வாங்கல்கள்**

உள்ளூராட்சி திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட பொறியியலாளர் ஒருவர் இருக்கையில் அவரின் சேவையை பெற்றுக் கொள்ளாது ஹுலுகங்கை பார்வை கூடத்தின் வேலை பூர்த்தி செய்யும் கருத்திட்டத்தின் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் நிர்மாணப்பணியை மேற்பார்வை செய்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மாகாண பொறியியலாளர் சேவை திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 410,373 தொகை செலுத்த வேண்டியிருந்தது.

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனுமதியின்றி 2017 ஜூலை , ஆகஸ்ட், செப்தெம்பர், மற்றும் ஒக்தோபர் மாதங்களுக்காக தொழிலாளர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொண்டு ரூபா 58,410 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பண்டக மெய்மையாய்வுக்கு சமூகமளித்ததற்கான எவ்வித எழுத்து மூல சான்றுகளும் இல்லாதிருந்த போதும் ரூபா 13,698 ஆன தொகை சமுதாய அபிவிருத்தி அலுவலருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 பெறுகைகள்**

**3.8.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டினுள் சபையினால் ரூபா 12,042,280 ஆன பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8.2 ஒப்பந்த நிருவாகம்**

**ஹுலுகங்கை பார்வை கூட்டத்தின் மீதி வேலைகளை பூர்த்தி செய்தல் மற்றும் நில அலங்காரம் செய்தல்**

2017 ஆண்டில் பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஹுலுகங்கை பார்வை கூட்டத்தின் மீதி வேலைகளை பூர்த்தி செய்தல் மற்றும் நில அலங்காரம் செய்வதற்காக தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ரூபா 7,569,220 தொகைக்கு ஒப்படைத்து ரூபா 6,234,085 பெறுமதியான பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் அடிப்படையில் ரூபா 5,197,560 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மதிப்பீட்டில் வேலை விடயம் இலக்கம் 14 கீழ் படிக்கட்டுகளிற்கு இடப்படும் பாதுகாப்பு வேலி மற்றும் வேலை விடயம் இலக்கம் 41 பிரகாரம் நில அழங்காரத்திற்காக விலையொன்றை (rate) உட்படுத்த முடியுமாக இருந்த போதும், அதற்காக முறையே ரூபா 1,700,000 மற்றும் ரூபா 1,000,000 ஆன விடயமொன்றாக மதிப்பிடப்பட்டிருந்தது. SSR 4(4) ன் கீழ் புற்தறையிற்காக ரூபா 61,207 மற்றும் 17 தொழிலாளர்களுக்காக ரூபா 22,525 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன், புற்தறையிற்கு நீர் ஊற்றல் மற்றும் பராமரிப்பு செய்திருக்காத போதும் ரூபா 119,250 செலுத்தப்பட்டிருந்தது. SSR 4(6) கீழ் 80 வீதிச் செடி நாற்றுகள் கொள்வனவு செய்தல் மற்றும் உரிய வேலைகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதும் ரூபா 119,000 செலுத்தப்பட்டிருந்தது. SSR 4(7) யின் கீழ் BSR அல்லாத விடயங்களாக மொத்த தொகையின் 20 வீதமான ரூபா 130,960 ஆன தொகையொன்று கூட்டப்பட்டிருந்ததுடன், அது மிகைக் கொடுப்பனவானது.

(ii) மதிப்பீட்டில் விடயம் இலக்கம் 33 பிரகாரம் பிரதான பாதை மதிலின் அளவுத்திட்டத்திற்கு அமைய பில்டர் பிரதேசம் தயாரிக்கப்பட்டு முறையாக நியமங்களுக்கு இணங்க weep holes தயாரித்தல் செய்யப்படாததுடன், 60 weep holes களிற்காக ரூபா 34,260 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மேலதிக வேலையாக கருங்கல் மதில் கட்டுதல் மற்றும் அகற்றலுக்காக ரூபா 1,481,743 செலுத்தப்பட்ட போதும், அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன், மேலதிக வேலைகளுக்காக மதிப்பீடு தயார்த்தல் மற்றும் கருங்கல் மதிலிற்காக திட்டமொன்றும் முன்வைக்கப்படவில்லை. சரிவுடன் கூடிய இவ்விடத்தில் contour walls அடித்தளத்திற்காக கொன்கிறீட் கலவை இடப்படாததுடன், C மதிலிற்காக 4.27 மீட்டர் உயரத்திற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. பௌதீக

பரிசோதனையின் போது அதன் உயரம் 2.567 மீட்டர் ஆனமையால் கன மீட்டர 18.62 இற்காக ரூபா 274,961 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மதிலிற்காக weep holes போடப்பட்ட போதும், அதற்காக கல் பரத்தப்பட்டு வடிவூடகம் இடப்பட்டிருக்கவில்லை. SSR 02 இன் கீழ் கருத்திட்டத்தின் மதிலொன்றை அகற்ற மேலதிக வேலை எனக் குறிப்பிட்டு அதற்காக ரூபா 160,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இம் மதிலின் அகற்றப்பட்ட கருங்கற்கள் புதிய மதிலிற்காக பயன்படுத்தப்பட்ட போதும், அது பட்டியலிடலின் போது குறைக்கப்படவில்லை.

(iv) நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 2017 டிசம்பர் 27 திகதி சபையிற்கு ஒப்படைக்க வேண்டிய போதும், 2018 மார்ச் 24 திகதியன்றும் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்ததுடன், ஒப்பந்தம் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுல் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 38 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,062,000ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 17 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 420,000 ஆன வருமானத்தில் எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மை ஆய்வு செய்யப்பட்டு எல்லா சொத்துக்கலையும் இனங்காணுபவத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | சில நிலையான சொத்துக்கள் எவ்வித பயனுள்ள வேலைக்கும் பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) | கணக்கீடு | (i) | சபைக்கு சொந்தமான எல்லா சொத்துக்கலையும் இனங்கண்டு கணக்கிடாமை. |
| | | (ii) | நிர்மாணங்கள் மூலதனமாக்கப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாகன கட்டுப்பாடு | (i) | வருமானம் ஈட்டக்கூடிய வாகனங்களிலிருந்து வருமானம் ஈட்டப்பட நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | வருமான கட்டுப்பாடு | (i) | வியாபார தொகுதிகளில் கடையறை மதிப்பீட்டினை அமுல்படுத்தாமை. |
| | | (ii) | வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்க வேண்டிய வியாபாரம் தொடர்பாக வருட ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்படாமை. |
| (உ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | (i) | ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட கடன் பட்டோர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | கடன்கொடுத்தோர் மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | ஓப்பந்த நிருவாகம் | (i) | நிர்மாணப்பணி கன்காணிப்பு பலவீனமான மட்டத்தில் நிலவியது. |
| | | (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| | | (iii) | கருத்திட்டங்களுடன் தொடர்பான அளவைகளில் குறைபாடுகள் நிலவியமை. |
| | | (iv) | கருத்திட்டங்கள் உரிய காலத்திற்கு பூர்த்தி செய்யப்படாமை. |
| | | (v) | பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்கள் நிலவுகின்றமை. |